OL/2021/45-T-I,II

முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

45 T I,II

மாகாணக் கல்வித் திணைக்களம்,வடமாகாணம்
**Provincial Department of Education. Northern Province**

நிலையறிபரீட்சை-2021

தரம் 10

**கர்நாடகசங்கீதம்I, II**
**Carnatic Music I, II**

**மூன்றுமணித்தியாலம்**
**Three Hours**

**கவனிக்க:**

- ☐ எல்லாவினாக்களுக்கும் விடைதருக.
- ☐ 1-40 வரையுள்ளவினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ☐ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை இடுக.

## பகுதி - 01

1. தெலுங்குப்பதங்களின் நாயகனாக கருதப்பபடுபவர்
   1. முருகன் 2 கிருஸ்ணர் 3. விநாயகர் 4. சிவன்

2. வில்லுப்பாட்டு நிகழ்வில் இடம் பெறாத இசைக்கருவி
   1. உடுக்கை 2. டோலக் 3. மிருதங்கம் 4. வீணை

3. ஒரு அலங்காரம் கொண்டுள்ள ஆவர்த்தனங்கள்
   1. 14 2.15 3. 10 4. 12

4. சிவபெருமானே எனும் கீதம் அமைந்துள்ள இராகம்
   1. ஹரஹரப்ரியா 2. மத்தியமாவதி 3. ஹரிகாம்போதி 4. பிலஹரி

5. சங்கராபரண இராகத்திற்குரிய பண்
   1. தக்கேசி 2.பழம்பஞ்சுரம் 3. நட்டராகம் 4. முல்லை

6. ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படும் உருப்படிகளில் ஒன்று
   1. திருவாசகம் 2. திருத்தாண்டகம் 3. திருவிசைப்பா 4. திருப்புராணம்

7. அப்பியாசகானம் சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி
   1. கீதம் 2. கீர்த்தனை 3. வர்ணம் 4. புதம்

8. மத்தியஸ்தாயிநிஸாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்.
   1. தோடி 2. நவரோஜ் 3. நாதநாமக்கிரியை 4. குறிஞ்சி



kalvi.lk

9. 14 அட்சர எண்ணிக்கைக் கொண்ட தாளம்
   1. திஸ்ரஜாதிஅடதாளம் 2. கண்டஜாதிஅடதாளம்
   3. கண்டஜாதிதுருவதாளம் 4. மிஸ்ரஜாதிமட்டியதாளம்

10. தாளத்தின் 3 அங்கங்களும் அழைக்கப்படுவது.
    1. திரியாங்கம் 2. திவிதியாங்கம் 3. ஷடங்கம் 4. சோடசாங்கம்

11. பஞ்சபுராணத்தில் இரண்டாவதாகப் பாடப்படுவது
    1. திருவாசகம் 2. திருப்பல்லாண்டு 3. திருவிசைப்பா 4. திருப்புராணம்

12. முத்துத்தாண்டவர் விடம் நீங்கப் பாடிய கீர்த்தனை
    1. தரிசனம்செய்வேனே 2. கண்டபின்கண்குளிர்ந்தேன்
    3. மாணிக்கவாசகர்பேறெனக்குத்தரவல்லாயோ 4. அருமருந்தொருதனிமருந்து

13. நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவி அமைந்த பதிகங்கள்
    1. திருவம்மானை,திருச்சாழல்,திருப்பொன்னூஞ்சல்
    2. தோவரம்,திருவாசகம்,திருவெம்பாவை
    3. திருவெம்பாவை,திருப்பாவை,திருப்பல்லாண்டு
    4. திருவிசைப்பா,திருச்சாழல்,திருப்புகழ்

14. சகலவாத்தியமாகவும் பகுத்வனிவாத்தியமாகவும் அமைந்துள்ள இசைக்கருவி
    1. வயலின் 2. தம்புரா 3. வீணை 4. நாதஸ்வரம்

15. திருவிசைப்பாபாடியவர்
    1. கருவூர்த்தேவர் 2. சேந்தனர் 3. நம்பியாண்டார்நம்பி 4. சேக்கிழார்

16. “இனிநமக்கொரு”என்ற கீர்த்தனையை இயற்றியவர்
    1. மாயூரம்வேதநாயகம்பிள்ளை 2. முத்துதாண்டவர்
    3. பாபநாசம்சிவன் 4. கோபாலகிருஸ்ணபாரதி

17. பல்லவி அனுபல்லவி சரணம் எனும் அங்கங்களைக் கொண்டமைந்த உருப்படிகளை முதன்முதலில் இயற்றியவர்
    1. தாளப்பாக்கம் சின்னையா 2. அன்னமாச்சாரியார்
    3. மாயூரம் வேதநாயகம்பிள்ளை 4. பாபநாசம்சிவன்

18. எல்லா ஸ்வரங்களும் கோமளமாக அமைந்த இராகம் .
    1. கல்யாணி 2. மாயாமாளவகௌளை 3. சுங்கராபரணம் 4. தோடி

19. வக்ர இராகத்திற்குஉதாரணம்
    1. மோகனம் 2. கமாஸ் 3. பிலஹரி 4. நவரோஜ்

20. வர்ணத்தில் எத்துக்கடைப்பல்லவி என அழைக்கப்படும் பகுதி
    1. பல்லவி 2. அனுபல்லவி 3. சரணம் 4. முக்தாயிஸ்வரம்

21. தோற் கருவிகளில் ஒன்று
    1. தாளம் 2. மிருதங்கம் 3. புல்லாங்குழல் 4. நாதஸ்வரம்



kalvi.lk

22. கல்யாணி இராகத்தின் இந்துஸ்தானிப் பெயர்
1.காபி2.கமாஜ்தாட் 3. யமன்தாட் 4.பைரவ்தாட்

23. T.R. மகாலிங்கம்,ரமணி,நவனீதம் போன்றோரால் வாசிக்கப்பட்ட இசைக்கருவி
1. நாதஸ்வரம் 2. புல்லாங்குழல் 3. வயலின் 4. மிருதங்கம்

24. சதுஸ்ரநடைக்குரிய ஜதி
1. தகிட 2. தகதகிட 3. தகதிமி 4. தகிடதகதிமி

25. இனி நமக்கொரு என்ற கீர்த்தனையின் இராகம்
1. காம்போதி 2. மத்தியமாவதி 3. தோடி 4.பிலஹரி

26. பகிர் சிருங்காரம்,அந்தர்பக்திஎனும் இரட்டைத்தார்பர்யத்துடன் கூடிய உருப்படிவகை
1. கீர்த்தனை 2. திருப்புகழ் 3. பதம் 4.வர்ணம்

27. வர்ணத்தில் இடம் பெறும் அங்கங்களின் எண்ணிக்கை
1. 4 2. 3 3. 2 4. 5

28. தமிழிசையில் தாய் இராகத்தைக் குறிப்பது
1.பண் 2. பண்ணியம் 3.திறம் 4.திறத்திறம்

29. கல்யாணியின் இராகத்தின் நேர் சுத்தமத்திம இராகம்
1. மத்தியமாவதி 2.சங்கராபரணம் 3. தோடி 4.ஹரகரப்ரியா

30. பின்வருவனவற்றில் சிறப்பான சுரதி வாத்தியம்
1. தம்புரா 2.சுருதிப்பெட்டி 3. ஒத்து 4. ஹார்மோனியம்

31. இந்தியசங்கீதத்தில் தாளங்கள் அழிந்துபோகாமல் புத்துயிர் அளித்தவாக்கேயகாரர்
1. முத்துத்தாண்டவர் 2. கோபாலகிருஸ்ணபாரதி
3. பாபநாசம்சிவன 4 அருணகிரிநாதர

32. வீணையின் மூலாதாரம் எனப்படுவது
1. சுரைக்காய் 2. நாகபாசம் 3. தந்தித்தாங்கி 4. குடம்

33. "உற்றுமை சேர்வது"எனும் பதிகம் போற்றும் தெய்வம்.
1.முருகன் 2. விநாயகர் 3. கண்ணன் 4. சிவன்

34. உத்க்ருஹம்,த்ருவம்,மேளபாகம்,ஆபோகம் எனும் அங்கங்களைக் கொண்ட உருப்படிவகை
1. திருவாசகம் 2. வெண்பா 3. பிரபந்தம் 4. வர்ணம்

35. தைவதாந்திய இராகத்திற்கு உதாரணம்
1. குறிஞ்சி 2. நவரோஜ் 3. மகதி 4. நாதநாமக்ரியை

36. பண் பஞ்சமம் குறிக்கும் இராகம்
1. பூபாளம் 2.பைரவி 3. ஆஹிரி 4. நீலாம்பரி

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

37. கல்யாணி இராகத்தின் கானகாலம்

1. காலை 2. மதியம் 3. இரவு 4. முாலை

38. மத்தியமாவதி இராகத்தின் ஆரொகண அவரோகணம்

1. ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ
2. ஸரிகபநிஸ் ஸ்நிபகரிஸ
3. ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ
4. ஸரிமபதஸ் ஸ்தபமரிஸ

39. புல்லாங்குழலில் வாய் வைத்து ஊதும் துளையின் பெயர்

1. தாரரந்திரம் 2. நாதவட்டம் 3. ஊதும்துளை 4. முகரந்திரம்

40. சபாகான உருப்படிகளில் ஒன்று

1. கீர்த்தனை 2. ஜதீஸ்வரம் 3. கீதம் 4. அலங்காரம்

(40 X 1 =40 புள்ளிகள்)

## பகுதி– 2

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக**

1

1. உபாங்க இராகத்திற்கு உதாரணமாக அமைந்த பண்கள் இரண்டு தருக ?
2. பேசாதே நெஞ்சமே என் றதாண்டவர் பாடலின் இராகம் எது? தாளம் எது?
3. வர்ஜ இராகம் என்றால் உன்ன?
4. சங்கீதசுதாகரம் என்ற நூலை எழுதியவர்?
5. ஆதிகாலத்தில் தமிழிசைக்கு பக்கவாத்தியமாக பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் எவை?
6. மத்திமகாலத்தில் அமைந்துள்ள பதவர்ணத்திற்கு உதாரணம் தருக?
7. தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார் வாழ்ந்த காலம்?
8. பல தத்துவக் கருத்துக்களைக் கொண்ட கீர்த்தனைகளை இயற்றியவர்?
9. ரிரிமம/பப/நிநி//பநிஸ்நி/ ஸா் / ஸா்//எனும் ஸ்வரப்பகுதிக்குரியசாகியத்தியப் பகுதியைஎழுதுக?
10. சம்பந்தர் தேவாரம் எத்தனையாம் திருமுறைகளில் அடங்குகிறது?

(2 +2+1+1+1+1+1+1+1+1 )

(மொத்தம் 12 புள்ளிகள்)



Education கல்வி
kalvi.lk

**2.** முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றினையும் இவரது இசைப்பணியையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க

1. வாழ்க்கைகாலம்
2. பிறந்த இடம்
3. இளமைக்காலம்
4. வாழ்க்கைச்சம்பவங்கள்
5. இவர் இயற்றியஉருப்படிகள் நான்கு
6. இவரதுஉருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு

( 1+1+2+4+2+2+= 12 புள்ளிகள் )

**3.** 1. வீணைவாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக

2. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி சுரதி சேர்க்கும் முறையினைக் குறிப்பிடுக.
3. இவ் வாத்தியத்தின் சிறப்புக்கள் நான்கு எழுதுக
4. இவ் வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் இருவரின் பெயர்களைத் தருக

(4+4+2+2+= 12 புள்ளிகள்)

**4.**பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஒரு இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக
( உருப்படிகள் சஞ்சாரம் எழுதுதல் வேண்டும் )

1. 65 வதுமேள இராகம் 2. எல்லாம் கோமள ஸ்வரமாகஅமைந்த இராகம்

(12 புள்ளிகள்)

**5.**பின்வரும் விடயங்களில் ஒன்று பற்றி விரிவாக எழுதுக
(உதாரணங்கள் இயற்றியவர் குறிப்பிடல் வேண்டும்)

1. பண்ணிசை 2. வர்ணம்

(12 புள்ளிகள்)

**6.** **1.** ஜன்னிய இராகம் என்றால் என்ன?
2. ஜன்னியஇராகப்பிரிவுகளைஎழுதுக?
3. அவற்றில் நான்கினை விளக்கி உதாரணம் தருக?

(2+ 2+ 8 = 12புள்ளிகள்)

**7.** 1. இந்தியாவில் 14ம் 15 ம்நூற்றாண்டுகளில் இசை வளர்ச்சி பற்றி நீர் கற்ற விடயங்களைத் தொகுத்து எழுதுக?

அல்லது

நீர் கற்ற ஆதிதாள வர்ணமொன்றின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரசாகித்திய தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக?

(12 புள்ளிகள்)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**